# சித்தர்களின் இறையியல் கொள்கைகள்

***மா. ஜெய வெங்கடேஷ் குமார்***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
ஜி.டி.என். கலை கல்லூரி
திண்டுக்கல், தமிழ்நாடு, இந்தியா

***முனைவர் சா. சுஜாதா***
தமிழ்த்துறைத் தலைவர் & நெறியாளர்
ஜி.டி.என். கலை கல்லூரி, திண்டுக்கல், தமிழ்நாடு, இந்தியா

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: செப்டம்பர்**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-5196

***ஆய்வுச்சுருக்கம்***

*சித்தர்களின் இறையியல் கொள்கைகள் என்னும் தலைப்பிற்குட்பட்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது. இறைவன் இருக்கும் இடம், தன்னை அறியும் அறிவு, உயிர் வளர்த்து மெய்யறிதல், கொல்லாமை எனும் நோன்பு, ஆன்ம ஈடேற்றம் என்னும் உட்தலைப்புக்கள் வழியாக சித்தர்களின் இறையியல் கொள்கைகளை விளக்க இக்கட்டுரை முயல்கிறது. இறைப்பேராற்றல் நம் உடலுக்குள் தான் நிறைந்து நிற்கிறது, நம் ஆன்மா உறையும் இடமே நம் உடல் என்கின்றனர் சித்தர்கள். இதை விளக்குவதாக முதல் உட்தலைப்பு அமைகின்றது. தன்னை அறியும் அறிவு என்னும் இரண்டாவது தலைப்பில் தான் வேறு கடவுள் வேறு இல்லை என்பதை உணர்தல், வெளி யறிவை விடுத்து உள்ளறிவை உணர்தல், அறிவமுதாய் விளங்கும் கடவுளை அறிதல், அதன் வழியே மெய்யறிவு பெறுதல், தன்னை அறிவது இறைவனை அறிவது என தெளி வதாக இரண்டாவது உட்தலைப்பு அமைகின்றது. உயிர் வளர்த்து மெய்யறிதல் என்னும் மூன்றாவது உட்தலைப்பில் உயிர்வாழும் வீடு உடலாகும், அவ்வுடலை காக்க மூச்சைக் காத்து வளர்க்க வேண்டும், பேச்சை நிறுத்தி மூச்சைக் கவனித்தல், இருமையில் இயங்கும் காற்றை ஒருமைப் படுத்தி இறையை உணர்தல், வாசி எனும் கலை பயின்று காலனைக் கடப்பது என்பனவற்றை விளக்குவதாக மூன்றாம் உட்தலைப்பு அமைகிறது. கொல்லாமை எனும் நோன்பு எனும் நான்காவது உட்தலைப்பில் எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வாழ்கிறார், உயிர்களிடத்தில் பேதம் காட்டக் கூடாது, பிற உயிர் கொன்று புசிக்கக் கூடாது, கொல்லாமை எனும் நோன்பு இருப்பவனை எல்லா உயிர்களும் தொழும், மன்னுயிரைத் தன்னுயிராய் நேசிப்பதே தவம் ஆகும் என்று விளங்குவதாக நான்காவது உட்தலைப்பு அமைகிறது. ஆன்ம ஈடேற்றம் எனும் ஐந்தாவது உட்தலைப்பில் ஆன்ம லயம் என்னும் ஒருமை நிலை அடைதல், எல்லா உயிர்களிலும் ஓரே பரம்பொருள் தான் உள்ளது என்பதை உணர்தல், அப்பரம்பொருளோடு தன் ஆன்மாவை கலத்தல், எங்கும் நிறைந்தது ஒரு பரம்பொருளே என அறிதல், தான் அடைந்த ஆன்ம இன்பத்தை அனைத்து உயிர்களுக்கும் அள்ளிக் கொடுத்தலே ஆன்ம ஈடேற்றம் என்பதைத் தெளி விப்பதாக ஐந்தாவது உட்தலைப்பு அமைகிறது. தொகுப்புரை, முடிவுரை, அடிக்குறிப்பு, துணைநூற்பட்டியல் என ஓர் ஆய்வுக்கட்டுரையின் அமைப்பில் இக்கட்டுரை நிறைவடைகிறது.*

## முன்னுரை

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் திருமூலரின் பாடல் வரி சித்தர்களின் இறையியல் கொள்கைக்கு மிகப் பொருத்தமான சான்று ஆகும். இறைவன் ஒருவனே என்ற தெளிவு பெற்றவர்கள் சித்தர்கள். ஜீவசமாதி என்ற பேரின்ப நிலையை அடைந்தவர்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என நான்கையும் அடக்கி நெறிப்படுத்தி சித்தம் தெளிந்தவர்கள். மனிதரிடையில் சாதி, மதம், இனம், நிறம், மொழி என எந்த வேறுபாடும் காணாதவர்கள் சித்தர்கள். சித்தர்களின் நோக்கில் ஒவ்வொரு உயிரும் கடவுள் தன்மை கொண்டது. இறை ஆற்றல் எல்லா உயிர்களிடத்தும் நிரம்பி வழிகிறது என்கிறார்கள் சித்தர்கள். கடவுளின் உண்மைத் தத்துவத்தையும், கடவுளை அடையக்கூடிய வழியையும் மிகத் தெளி வாகக் கூறியவர்கள் சித்தர்கள். சித்தர்கள் எல்லையில்லாப் பரம்பாருளை அப்பெரும் இறைசக்தியைத் தம் உடலிலே கண்டு தெளிந்து பிறரும் அடையும் வண்ணம் உலகுக்கு விளக்கிச் சென்றுள்ளனர். சித்தர் பாடல்களில் பொதிந்துள்ள சித்தர்களின் இறையில் கொள்கைகளை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## இறைவன் இருக்கும் இடம்

நம் உடலில் இறைப் பேராற்றல் நிறைந்துள்ளது என்ற உண்மையை நாம் உணரும் போது நாமும் இறைவனில் ஓர் அங்கம் ஆகிறோம்.

**"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிராணார்க்கு வாய்கோபுர வாசல்**
**தெள்ளத் தெளி ந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே"[1]**

என்னும் பாடலில் நம் உள்ளம் இறைவனின் பெரிய கோவில், நமது உடம்பு ஆன்மா உறையும் ஆலயம், நமது வாய் கோபுரத்தின் வாசல், தெள்ளத் தெளிந்த மனம் உடையார்க்கு உயிர் சிவலிங்கம், நம் புலன்கள் ஐந்தும் ஒளி பொருந்திய பெரிய விளக்காகும் என்று திருமூலர் விளக்குகிறார்.

மனிதன் கோயில் கோயிலாக அலைவதையும் குளங்களில் புனித நீராடல் என்று குளிப்பதையும் நிறுத்தி ஆவதும் இன்றி அழிவதும் இன்றி எங்கும் நிறைந்த இறைப் பேராற்றலை தத்தம் மனத்துள் கண்டு வழிபடுவதே வழிபாடு ஆகும் என்பதை சித்தர் சிவவாக்கியர்,

**"கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா**
**கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே**
**கோயிலும் மனத்துளே குளங்களு மனத்துளே**
**ஆவது மழிவது மில்லையில்லை யில்லயே"[2]**

என்னும் பாடலில் இறைவனின் இடத்தை மிகத் தெளி வாக புலப்படுத்துகிறார்.

## தன்னை அறியும் அறிவு

தான் வேறு கடவுள் வேறு என்றில்லாமல் தன்னையறிந்து அதன் வழி இறைவனை அறிதலே தன்னை அறியும் அறிவு ஆகும். இந்த வழி ஒன்றே இறைவனை அடையும் வழி ஆகும். வெளி யறிவை விடுத்து உள்ளறிவை உணர்ந்து தன்னைத் தான் அறிந்து மெய்ப்பொருளாம் இறையை உணர்வதே தன்னை அறியும் அறிவு. அறிவமுதமாய் விளங்கும் கடவுளை அறிவதே மெய்யறிவு என்பதை,

**"தன்னை யறிய வேணும் அகப்பேய்**
**சாராமற் சார வேணும்**
**பின்னை யறிவதெல்லாம் அகப்பேய்**
**பேயறி வாகுமடி"[3]**

என்னும் பாடலில் தன் அறிவோடு சார்ந்து தன்னை அறிந்து தெளிவதே அறிவு என்றும், மற்ற அறிவு அனைத்தும் பேயறிவு என்றே பகர்கின்றார் அகப்பேய்ச்சித்தர்.

**"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை யறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே"[4]**

என்னும் பாடல் வாயிலாக திருமூலர், தன்னை அறிந்தவருக்கு கேடில்லை, தன்னை

அறியாதவன் தானே கெடுகின்றான், தன்னை அறிந்து கொண்டவன் தன்னையே இறைவனாய் அர்ச்சித்துக் கொண்டிருப்பான் என்றும் அறிவின் வழியில் சென்றால் ஆண்டவனை அறியலாம் எனவும், அறிவை உணர்வது ஆண்டவனை உணர்வது ஆகும் என்றும் தெளி ந்து உரைக்கிறார்.

இரு வினைகளையும் அறுத்து தன்னையறிந்து அதனூடே இறைவனை அறிய இறைவன் வழிகாட்டினான் என்று பட்டினத்தார் தன் அருட்புலம்பலில்,

**"என்னையே நானறிய இருவினையும் ஈடழித்துத்**
**தன்னை யறியத் தவமெனக்குச் சொன்னாண்டி"[5]**

என்னும் பாடல் வழி தன்னையறியும் தவமியற்றித் தானாய் விளங்கும் கடவுளை அறிந்தேன் என்கிறார்.

## உயிர் வளர்த்து மெய்யறிதல்

உயிர் வாழும் வீடு உடல் என்றும் அவ்வுயிரை வளர்க்க வேண்டுமெனில் உடலைக்காக்க வேண்டும். உயிரை வளர்த்தால் உடல் காக்கப்படும் சூழல் ஏற்படும். உயிரை வளர்க்கும் ஒரே வழி மூச்சை காத்தல். மூச்சை சித்தர்கள் வாசி என்று அழைப்பர். "மூச்சப்பா தெய்வமென்றே யறியச் சொன்னார் முனிவோர்கள் இருடியரிப் படியே சொன்னார்" என்று அகத்தியர் மூச்சே தெய்வம் என்று தெளிவுபடுத்துகிறார். மேலும்,

**"பேச்சப்பா பேசாமல் நூலைப் பார்த்துப்**
**பேரான பூரணத்தை நினைவாய்க்காரு**
**வாச்சப்பா பூரணத்தைக் காக்கும் பேர்கள்**
**வாசிநடு மையத்துள் வாழ்வார் தானே"[6]**

என்னும் பாடல் வழி அகத்தியர் பேசாமல் இருந்து மூச்சைக் கவனித்து வாசியைக் காத்தால் பூரணமாகிய உயிர் தெய்வம் வாசியாகி நம் நடு மையத்துள் வாழும் என்கிறார்.

இடக்கலை பிங்கலை என்று இரு வழியில் சென்று வரும் காற்றை ஒரு வழியாய் ஆக்கி காற்றின் கணக்கறிந்து மூச்சுப் பயிற்சியின் வழியே சித்தம் தெளி ந்து, சீவன் உணர்ந்து உயிராய் இருக்கும் கடவுளை அறிந்து மெய்யுணர்வுடன் காலனைக் கடக்கலாம் என்பதை,

**"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்**
**காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்**
**கூற்றை யுதைக்குங் குறியது வாமே"[7]**

என்னும் பாடல் வழியாக திருமூலர், உயிர்வளர்க்கும் கலையை உணர்த்தி மெய்ஞ்ஞானம் பெறும் நெறியைப் பறைசாற்றுகிறார். இதே திருமூலர்தான், "உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே, உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" என்று நம் உயிரில் உண்மைக் கடவுளை அறியலாம் என்கிறார்.

## கொல்லாமை எனும் நோன்பு

எல்லா உயிர்களிலும் கடவுள் வாழ்கிறார் எனும் இறைக்கொள்கை கொண்ட சித்தர்கள் கொல்லாமையைத் தங்கள் உயிர்க் கொள்கையாய்க் கொண்டு வாழ்ந்தனர். உயிர்களிடத்தில் பேதமின்றி எல்லா உயிர்களையும் அன்புடன் நேசித்தவர்கள் சித்தர்கள்.

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்"[8]**

என்னும் குறள் மூலம் திருவள்ளுவர் பிற உயிர் கொன்று புசிக்கும் அற்பப் பிறவியாய் இல்லாமல் கொல்லாமை நோன்பு மேற்கொள்ளும் அரியப்பிறவியரை உலகின் எல்லா உயிரும் தொழும் என்று அறிவுறுத்துகிறார்.

**"மன்னுயிரைக் கொன்று வதைத்துண் டுழலாமல்**
**தன்னுயிர்போ லெண்ணித் தவமுடிப்பதெக்காலம்"[9]**

என்று பத்திரகிரியார் மன்னுயிரைத் தன்னுயிராய்க் கருதி அதைக் கொன்று உண்டு வாழாமல் ஒரு தவவாழ்வு வாழவேண்டும் என்கிறார்.

### ஆன்ம ஈடேற்றம்

ஆன்ம லயம் என்பது ஒருமை நிலை எய்தலாகும். எல்லா உயிர்களிடத்திலும் நிறைந்துள்ள இறையை உணர்ந்து காணும் வடிவம் அனைத்திலும் ஓர் உணர்வைப் பெறும் பெரிய நிலையே ஆன்ம ஈடேற்றம். எங்கும் நீக்கமற்று நிறைந்திருக்கும் ஒரு பரம்பொருளைப் பற்றிக் கொண்டு தன் ஆன்மாவை ஆதிமூலத்தோடு இணைத்து இன்பம் பெறுவதே ஆன்ம ஈடேற்றம் ஆகும்.

**"அம்மையப்ப னுப்புநீ யறிந்ததே யறிகிலீர்**
**அம்மையப்ப னுப்புநீ யரியய னரனுமாய்**
**அம்மையப்ப னுப்புநீ ராதியா தியானபின்**
**அம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யானதே"[10]**

என்னும் பாடல் வழியாக சிவவாக்கியர் கடவுள் வேறு நாம் வேறு அல்லர் என்றும், அம்மை, அப்பன், அரி, அயன், அரன் என எந்த வேறுபாடும் இல்லாமல் ஆதியோடு நம் உணர்வு கலந்த பின் இருமை நீங்கி ஒருமை வாய்த்து ஆன்மா ஈடேறும் நிலையைத் தெளி வுபடுத்துகிறார்.

"அங்கும் இங்கும் ஆகின்ற ஆதிமூர்த்தி ஒன்றதோ" என்று இரு வேறு நிலையில் பரம்பொருள் இல்லை என்பதை மிகத்தெளிவாக சித்தர் சிவவாக்கியர் நிலைநாட்டுகின்றார். இதையே பாரதியார், "பரம்பொருள் ஒன்றே நாம் அதன் மக்கள்" என்கிறார். ஆக நம் ஆன்மா எங்கிருந்து வந்ததோ அங்கே சென்று சேர்வதே ஆன்ம ஈடேற்றம் என்று நாம் உணர்ந்து கொள்ளமுடிகிறது.

சித்தர்கள் தாம் அடைந்த அந்நிலையை உலகத்தார் அனைவரும் அடைய கருதியே தங்கள் பாடல்களில் தாம் உணர்ந்த அனைத்தையும் பதிவு செய்து சென்றுள்ளனர். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதே சித்தர்களின் இறையியல் கொள்கை என நாம் உணர முடிகிறது.

### தொகுப்புரை

சித்தர்களின் இறையியல் கொள்கைகள் பற்றி ஆராயும் இக்கட்டுரையில் இறைவன் இருக்கும் இடம் என்னும் தலைப்பில் இறைவன் நம் உடலுக்குள்தான் இருக்கிறான் என்றும், தன்னை அறியும் அறிவு எனும் தலைப்பில் தன்னை அறிதலே தலைவனை அறிதல் என்றும், உயிர்வளர்த்து மெய்யறிதல் என்னும் தலைப்பில் இறைவன் வாழும் வீடாகிய நம் உடலைக்காக்க வாசி எனும் மூச்சுப் பயிற்சியைக் கற்று மெய்யறிதல் வேண்டும் என்றும், கொல்லாமை எனும் நோன்பு என்ற தலைப்பில் பிற உயிர்களையும் தன்னுயிர் போல் நேசிக்க வேண்டும் என்பதையும், ஆன்ம ஈடேற்றம் என்னும் தலைப்பில் தன்னுள் இருக்கும் பரம்பொருளே எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறது என்பதை உணர்தல், தான்பெற்ற ஆன்ம லயத்தைப் பிற உயிர்களுக்கும் அள்ளிக்கொடுத்தல் போன்ற சித்தர்களின் இறையியல் கொள்கைகளைத் தொகுத்து அளிக்கிறது இக்கட்டுரை.

### முடிவுரை

சித்தர்கள் தங்களுக்கென்று தனித்தன்மையுடன் கூடிய கொள்கைகளை வகுத்து வாழ்ந்தனர். உலகின் அனைத்து உயிர்களிடத்தும் பேதமற்று அன்பை வாரி வழங்கியவர்கள். இறைவன் இருக்கும் இடம் அறிந்து, அதை அறிவால் உணர்ந்து, மெய்யறிவு பெற்று, உயிர்வளர்க்கும் கலை அறிந்து, கொல்லாமை எனும் நோன்பு கொண்டு, ஆன்ம ஈடேற்றம் அடைந்தவர்கள் சித்தர்கள். தமிழர்களின் தனிப்பெரும் செல்வமாக சித்தர் பாடல்களும் அவர்களின் இறையியல் கொள்கைகளும் என்றென்றும் நிலைத்திருக்கும் தன்மை கொண்டது.

### அடிக்குறிப்புக்கள்

1. ஜி. வரதராஜன் (உ.ஆ.), திருமந்திரம், தெளிவுரை, ப. 56.
2. வா. சரவணமுத்து, பெரிய ஞானக்கோவை, ப. 09.
3. மேலது, ப. 248.

4. ஜி. வரதராஜன் (உ.ஆ.), திருமந்திரம் விரிவுரை, ப. 305.
5. வா. சரவணமுத்து, பெரிய ஞானக்கோவை, ப. 133.
6. மேலது, ப. 301.
7. ஜி. வரதராஜன் (உ.ஆ.), திருமந்திரம் விரிவுரை, ப. 298.
8. ஜி. வரதராஜன் (உ.ஆ.), திருக்குறள் உரை விளக்கம், ப. 125.
9. வா. சரவணமுத்து, பெரிய ஞானக்கோவை, ப. 175.
10. மேலது, ப. 25.

**துணைநூற்பட்டியல்**

1. வா. சரவணமுத்து, பெரியஞானக்கோவை, இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை
2. ஜி. வரதராஜன், (உ.ஆ.), திருக்குறள் உரை விளக்கம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
3. ஜி. வரதராஜன், (உ.ஆ.), திருமந்திரம் விரிவுரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.